## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்தின் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து முகவராண்மையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

முகவராண்மையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் முகவராண்மை வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக முகவராண்மை தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக முகவராண்மை தொடர்ந்தியங்குவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எனது முடிவுரைகளானது கணக்காய்வாளரின் அறிக்கைத் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் மீதான அடிப்படையிலானதாகும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் முகவராண்மையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் முகவராண்மையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது முகவராண்மையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- முகவராண்மை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- முகவராண்மையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்கீட்டு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கிட்டு நியமம் 2 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் நேரடி முறையில் காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது செயற்பாட்டு நடைமுறைகளின் தேறிய காசு பாய்ச்சல் சாதாரண நடவடிக்கைகளில் மிகை அல்லது பற்றாக்குறையுடன் இணக்கம் செய்யப்பட்டு அது காசு பாய்ச்சலின் பகுதியொன்றாக அல்லது நிதி கூற்றுக்களின் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்தின் நிதிக் கூற்று தயாரிக்கும் போது காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நியமத்தின் பிரிவின் பிரகாரம் காசு காய்ச்சலகூற்றில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் 2023 வருடத்தை உள்ளடக்குகின்ற மொத்த பெறுமதி ரூபா 63,699,742 ஆன ஆய்வு செயற்திட்டங்கள் 05க்கு உரிய ஆலோசனை சேவை வருமானம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு | உரிமம் வெகுமதிகள் கிடைக்கப் பெறுதல் மற்றும் செயற்திட்ட வருமானம் கிடைக்கப் பெறுதல் தொடர்பான கணக்கீட்டு நியமம் சீர் செய்தல் தொடர்பாக மேலும் ஆலோசனை பெற்றுக் கொள்ளுதலுக்காக பட்டய | நியமத்தின் பிரிவின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நியமம் 10 இன் 20 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்டத்தின் இறுதி நிலையை கருத்தில் கொண்டு செயற்திட்டத்தின் வருமானங்கள் கணக்கிடப்படாமல் அந்த செயற்திட்டங்களின் மீளாய் வாண்டின் செலவுக்கு சமமான ரூபா 11,731,747 ஆன பெயரளவு ஆலோசனை வருமானம் ஒன்று கணக்குகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. | கணக்காளர் நிறுவனத்தின் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம மீளாய்வு குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கும் அத்தோடு தாங்கள் தற்போது மேற்கொள்ளுகின்ற சீராக்கங்களில் வேறுபாடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டி இருப்பின் அது தொடர்பாகவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது முன்பு பெறப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் உள்ளவாரான செலவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற சீராக்கங்கள் சரியானவை என்பதாக. | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 3,626,362 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் உண்மையான கொள்வனவுப் பெறுமதி ரூபா 9,197,117 ஆக காணப்பட்டதனால் முதலீட்டு நடவடிக்கைகள் ரூபா 5,570,755 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஏற்பட்ட கணக்கிட்டுப் பிழை ஒன்றாக ஏற்றுக் கொள்வதுடன் 2024 நிதிக் கூற்றினுள் ஒப்பிட்டு தகவல்களை சமர்ப்பிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | சரியாக காசு பாய்ச்சல் கூற்றை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடங்களுக்குரிய ரூபா 1,112,652 ஆன ஆராய்ச்சி கொடுப்பனவு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் வேதனங்கள் செலவுகளாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியில் மீளாய்வாண்டில இலாபம் குறைவாகவும் மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈட்டல்கள் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது. | ஆராய்ச்சி கொடுப்பனவு செலுத்துதல் இதுவரை பின்பற்றப்பட்டிருப்பது அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஒரே தடவையில் கொடுப்பனவாக மேற்கொண்டு வருடத்திற்குரிய கணக்கில் இடுதல் ஆகும். கணக்காய்வு அவதானிப்பு ஏற்கொள்ளப்படுவதோடு எதிர்காலத்தில் காட்டப்பட்டுள்ள வகையில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | முன்னைய வருடங்களின் செலவுகள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | 2021 டிசம்பர் 23ஆம் திகதியிலிருந்து 2023 ஜூன் மாதம் 21 ஆம் திகதிரியான காலத்துக்குரிய செலுத்தப்படாதிருந்த ரூபா 1,717,276 | ஆராய்ச்சி கொடுப்பணவுற்காக இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையினால் அங்கீகாரம் பெற்றுக் | நிதிக்கூற்றுனுல் ஆராய்ச்சி கொடுப்பனவு கணக்கிடப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | ஆன ஆராய்ச்சி கொடுப்பனவு நிதிக் கூற்றுகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட வேண்டிய செலவுகள் ரூபா 1,717,276 குறைவாகவும் வருடத்தின் இலாபம் ரூபா 565,677 மற்றும் தடுத்து வைக்கப்பட்ட ஈட்டல்கள் ரூபா 1,151,599 ஆக கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது. | கொடுக்கப்படுவது குறித்த கணக்கீட்டு வருடத்திற்கு முன்னைய வருடங்களுக்குரிய கொடுப்பனவுக்கே ஆகும். செலுத்தப்படுகின்ற ஆராய்ச்சி கொடுப்பனவு கணக்கிடப்படுவது உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற நிதியாண்டின் செலவொன்றாகவே ஆகும். | சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | கடல் இனவிருத்தி மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செலுத்தப்பட்ட முற்பண தொகையிலிருந்து அறவிடப்படாத ரூபா 2,432,290 தொகை முற்பணமாக கணக்கிடப்படாமல் நிறைவேற்றப்பட்டு வரும் வேலையாக கணக்கிடப்பட்டதன் காரணமாக நடைமுறை சொத்துக்கள் அந்த அளவில் குறைவாகவும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அந்த அளவில் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது. | இங்கு 2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முற்பணக்கில் காட்டப்பட வேண்டிய மீதி ரூபா 1,260,582.11 ஆகும். ஏனைய தொகைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்ற வேலையினுள் காட்டப்படுவது சரியானதாகும் என்பதாக. | மூலதன நிர்மாணிப்புக்காக மேற்கொள்ளப்படுகின்ற முற்பன தொகை சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (உ) | பணாபிட்டிய பிரதேச ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் ரூபா 1,443,758 ஆன மீன் உணவுகள் மற்றும் மீன் விற்பனை வருமானங்கள் மீளாய்வாண்டில் வருமானங்கள் கிடைக்கப் பெறுதலின் கீழ் கணக்கிடப்படாமல் D 553 செயற் திட்டத்தின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. அந்தக் கணக்கில் இருந்து ரூபா 514,849 ஆன வருடத்தின் செலவுகள் சீராக்கம் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ரூபா 535,547 ஆன ஆரம்ப மீதியும் உள்ளடங்களாக ரூபா 1,464,456 ஆன நீதி செயற்திட்ட கடன் கொடுத்தோர் ஆக கணக்கிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக வருடத்தின் இலாபம் மற்றும் காசு பாய்ச்சல் கூற்றின் ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் உருவாகிய காசு பாய்ச்சல் ரூபா 928,909 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் வருடத்தின் பனா பிட்டிய பிரதேச ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் மீன் உற்பத்திக்கான தேவையான அளவு ஏற்பாடுகள் இல்லாததன் காரணமாக தொடர்ந்து மீன் உணவுகளை தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெறுகின்ற வருமானங்களை பயன்படுத்திக் கொண்டதுடன் அந்த பணம் மீண்டும் மீண்டும் பாவனைக்கு படுத்துவதற்காக வேறொரு நிதியம் ஒன்றாக பேணப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதாக. | ஆண்டுக்கான வருமானம் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் தனியார் கப்பல் கம்பனியின் சர்வதேச கப்பல் ஒன்றுக்காக தயாரிக்கப்பட்டிருந்த கடற்படை வரைபடத்திற்காக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 2,080,000 ஆன தொகை நிதி கூற்றினுள் வருமானங்களின் கீழ் கணக்கிடப்படாமல் செயற்திட்ட கடன் | நீரியல் கல்விப் பிரிவினால் முன்வைக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், ஆரம்பத்தில் இங்கு ஒரு கடனாளி உருவாக்கப்பட்டு, அதற்கான பணியை கடனாகப் புகாரளிக்காததால், அது கடனாளராகக் | ஆண்டுக்கான வருமானம் சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கொடுத்தோரின் கணக்கிடப்பட்டிருந்தது. | கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. |

**1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை.**

| விடயம் | தொகை<br>ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| ரூபா 83,675,867 ஆன முற்பணங்களை தீர்த்தல், அட்டுறு செலவுகள், பிழையை சரி செய்வதற்கான நாட்குறிப்பு வவுச்சர் 65 க்குரிய எவ்வித மூலாதார ஆவணமொன்றும் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அந்த நாட்குறிப்பு வவுச்சரின் உண்மை தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாது இருந்தது. | 83,675,867 | நாட்குறிப்பு வவுச்சர் 65 க்குரிய மூலாதார ஆவணம் | இங்கு குறைபாடொண்டு ஏற்பட்டுள்ளதுடன் அதை எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக. | மீதிகளின் உண்மை தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு குறித்த உறுதிப்படுத்தல் ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 395 | நிதிப் பிரமாணம் 395 இன் பிரகாரம் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டு கொடுப்பனவை மேற்கொள்ளும் உத்தியோகத்தினால் சான்றுதிப்படுத்தப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பரிசீலனைக்காக ஆயத்தப்படுத்தி இருக்க வேண்டிய போதிலும் பிரதேச அலுவலகத்துக்காக பேணப்பட்டு வருகின்ற கணக்குகள் மூன்று அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச அலுவலகத்திற்காக வங்கி இணக்க கூற்று தயாரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை இது தொடர்பாக கவனத்தை ஈடுபடுத்தி 133 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதிப் பிரமாணம் 395 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2017 நலம்பர் 22ஆம் திகதிய 17/2512/725/037 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | 2006 ஆம் வருடத்திலிருந்து 2015 அக்டோபர் மாதம் வரையும் ரூபா 39.93 மில்லியன் நிலுவை ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்பு 2 வருடங்களினுள் சுய ஈட்டல்களின் மூலம் மீண்டும் செலுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானத்தின் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 36,389,679 ஆன நிலையான வைப்பு வட்டி வருமானம் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் ரூபா 17,237,045 ஆன செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்பை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அமைச்ச வரை அமைக்க ரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த பணம் தீர்த்து வைப்பதற்கு போதுமான அளவு தொகையொன்று 2018, 2019 ஆம் வருடங்களில் நிறுவனத்திடம் காணப்படவில்லை. 2019, 2021 காலங்களில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாகவும் பொருளாதார சிக்கல்கள் மேலோங்கி காணப்பட்டதனாலும் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. பின்னர் இது தொடர்பாக கவனத்தை மேற்கொண்டு கட்டுப்பாட்டு சபையினால் இந்த பணத்தை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு 03 வருடங்களினுள் தீர்த்து வைப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>இந்த நிலைமை எதிர்காலத்தில் அமைச்சரவைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | அமைச்சரவை தீர்மானங்களுடன் இணங்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 50,541,096 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய வருடத்தின் மிகை ரூபா 38,087,808 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,453,288 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு ஏனைய வருமானங்கள் ரூபா 46,585,939 ஆல் மற்றும் அரச மானியம் ரூபா 13,896,759 ஆல் அதிகரித்ததும் தனிப்பட்ட சம்பளங்களினதும் படிகளினதும் செலவுகள் ரூபா 34,148,925 வினால் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவு ரூபா 12,238,853 வினால் குறைந்ததும் தாக்கம் செலுத்தியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 ஆம் தேதியில் நிதி கூற்றினுள் நடைமுறை சொத்துக்களின் கீழ் வியாபார மற்றும் ஏனைய கிடைப்பணவாக ரூபா 29,636,894 ஆன மீதிகளுக்கிடையில் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 3,083,897 ஆன முற்பணங்கள் ஏனைய கடன் கொடுத்தோர் மற்றும் ஊழியர் கடன் என்பவற்றை அறவிட்டுக்கொள்வதற்கு நிச்சயமற்ற தன்மையொண்டு காணப்படுகிறது. | அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கிடைக்கப்பெற வேண்டிய மீதியை தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 16,868,610 ஆன மதிப்பீட்டு பெறுமதியொன்றுடனான மீன் உணவு உற்பத்தி இயந்திரம் 2016 மார்ச் 15ஆம் தேதி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டு 2021 ஆம் வருடத்தில் இயந்திரம் மீண்டும் முகவர் நிறுவனத்திலிருந்து பெறப்பட்டிருந்தது. 2020 ஜுன் 05ஆம் திகதியில் இருந்து 31 மாத காலங்கள் வரையான கால இல்லைக்கூறிய ரூபா 46 50,000 ஆன நிலுவை குத்தகை பணத்தை அந்த நிறுவனத்திடமிருந்து அறவிடப்பட்டு இருக்கவில்லை. மீண்டும் 2023 மே மாதத்தில் வேறொரு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அந்த இயந்திரம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த குத்தகை ஒப்பந்தம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாத துடன் அந்த குத்தகைதாரினால் இயந்திரம் கோளாறு அறிக்கை படுத்தப்பட்டு அதன் மாதாந்த வாடகை பணம் செலுத்தப்படாதிருந்தது. அவ்வாறு இருந்தபோது முகாமைத்துவத்தினால் இந்த இயந்திரத்துக்குரிய உடன்படிக்கை ஒப்பந்தம் நிறைவு செய்யப்படுவதற்கு அல்லது ஒப்பந்தம் பிரகாரம் தவணை பணத்தை அறவிட்டுக் கொள்ளுதல் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 133 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் பரிந்துரைக்கப்பட்டதாவது இந்த இயந்திரம் மேலும் பயன்படுத்தப்படுதல் சாத்தியமற்றதாக இருந்தால் பொருத்தமான முறைமையை பயன்படுத்தி அவற்றை நீக்குவதற்கு ஆகும். | இந்த இயந்திரத்துக்குரிய ஒப்பந்தம் முடிவுறுத்தல் அல்லது ஒப்பந்தத்தின் பிரகாரம் தவணை பணத்தை அறவிட்டுக்கொள் ளுதல் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நீரியல் வளங்கள் சார்ந்த சிறிய உணவு வகை ஒன்று மற்றும் கருவாடு சார்ந்த உற்பத்தி முறைமை அடையாளப்படுத்துதல் தொடர்பான ஆராய்ச்சி செயற் திட்டத்திற்காக 2021 ஆம் வருடத்தில் இருந்து 2023 ஆம் வருடம் வரை ரூபா 1,590,592 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கணக்காய்வு தினமாகும் போது 3 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த ஆராய்ச்சி செயற்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோளொண்டான மீன் புரோட்டின் உடனான நீர் வளங்கள் நீரியல் வளங்கள் சிறு உணவு வகை ஒன்று உற்பத்தி செய்தல் மற்றும் அடையாளப்படுத்துவதற்கான நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை. | இணங்குகின்றேன். | செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கம் நிறைவேற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சமுத்ரிகா படகு ஆராய்ச்சி மற்றும் அளவீட்டு நடவடிக்கைகளுக்காக பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன் நிறுவனத்தினால் அந்த எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் மற்றும் இலக்கை அண்மிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் படகின் திருத்த வேலைகளுக்காக மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக மீள்ாய் வாங்கினுள் ரூபா 37,816,050 செலவிடப்பட்டு இருந்தது. 2023 பிப்ரவரி மாதத்தில் இருந்து கடற்படையுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவடைந்ததன் காரணமாக படகின் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நேர்ந்திருந்தது. | தற்போது படகு செயல்பாட்டுக்காக பொருத்தமான சேவை வழங்குநர் ஒருவரை கண்டறிவதற்காக முகாமைத்துவம் உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்டு வருகின்றது | படகு் ஆராய்ச்சி மற்றும் அளவீட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 1996 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கமுடைய நாரா திருத்த் அதிகாரச் சட்டத்தின் மூலம் நீரியல் அளவீட்டு அறிவியல் தரவுகள் சேகரித்தல் மற்றும் குறித்த பட வரைவு நடவடிக்கைகள் முகவர் நிறுவனத்தின் ஆரம்ப பணியொன்றாக காட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,995,152 செலவிடப்பட்டிருந்தது. அதன் போது கொழும்பிலிருந்து நீர் கொழம்பு வரையும் | வருடத்திற்கான தேசிய பட வரைவு செயற்திட்டத்தின் கடற்படை பட வரைபுக்காக தரவு சேகரித்தலுக்காக மிகவும் பெருந்தொகையான பணத் தொகை ஒன்று தேவைப்படுவதுடன் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த தேசிய பட வரைவு | முகவர் நிறுவனத்தின் ஆரம்ப பணிகள் நிறைவேற்றப்படும் வகையில் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கொழும்பிலிருந்து வழியாமம் வரையும் மேற்கொள்வதற்கு இருந்த நீரியல் அளவீட்டு அறிவியல் தரவின் அடிப்படையிலான படவரைவு வேலைத்திட்டங்களில் தரவு சேகரிக்கும் நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நூற்றுக்கு 50 ஆன பௌதிக முன்னேற்றம் ஒன்று மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் ரூபா இரண்டு மில்லியனான தொகையே ஆகும். ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளினுள் களப்பணி நடவடிக்கைகள் விசேடமாக இந்த கடற்படை படவரைபுக்குரிய நில அளவீட்டு நடவடிக்கைகள் ஆகிய அளவீட்டு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த படவரைவு உள்ளடங்கப்படுகின்ற பிரதேசங்களின் நீரியல் கல்விசார் தரவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளிலும் உச்ச அளவில் களப்பணிகள் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காக பணத்தை செலவிடுவதற்கு நேர்ந்தது. |

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப பிரிவின் (Analytical Chemistry Laboratory) பரிசோதனை நடவடிக்கைகளுக்காக பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற 04 ஆய்வு கூட உபகரணங்கள் வருடத்தின் எவ்வித மாதிரி பரிசோதனை ஒன்றுக்காகவும் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதுடன் மேலும் இரண்டு உபகரணங்களின் மாதிரிகள் 58ன் மாத்திரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 27,536,564 ஆன ஆய்வு கூட உபகரணங்கள் 04 மற்றும் பெறுமதியை அடையாளம் காண முடியாத இரண்டு உபகரணங்கள் முறையான வினைத்திறனான மட்டத்தில் அன்மிக்க கூடிய அளவில் முடியாத நிலையில் உள்ளது. | Histamine சோதனைக்காக ஈடுபடுத்தப்படுகின்ற HPLC (High Performance Liquid Chromatography) உபகரணங்கள் ஊடாக 2023 வருடத்திற்குரிய ஆய்வுக்கூடத்துக்கு கிடைக்கப்பெற்ற மாதிரிகளின் அளவுகள் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. Bomb Calorimeter என்ற பெயருடைய உபகரணம் தற்போது உற்பத்தி செய்யப்படாததனால் திருத்தத்திற்கு உட்படுத்த முடியாததாக சேவை வழங்குனரினாள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் இந்த உபகரணம் சிதைவடைந்த பொருள் ஒன்றாக கலஞ்சிய சாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மிகுதி உபகரணங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ள திருத்த வேலைகள் மற்றும் பயிற்சி பெற்றுக் கொள்ள முடியுமான அளவு என்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது | ஆய்வு கூட உபகரணங்கள் வினைத்திறனான மட்டத்துக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கற்பிட்டி குடாவ பிரதேசத்தின் பலவகை விஷேட மீன் இன விருத்தி தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக 03 ஏக்கர் அளவான காளிணி ஒன்று 2022 பிப்ரவரி 16ஆம் திகதியில் இருந்து 30 வருட காலத்துக்கு குத்தகை பெறப்பட்டிருந்த போதிலும் அதன் உரிமையை சுவைகரிப்பதற்கு முன்னர் அவ்வாறனில் 2020 ஆம் வருடத்தில் அந்த காணியில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 1,631,963 ஆன செலவொன்றை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த காணி உரிய நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாமல் இதுவரை குறை பயன்பாடொன்றாக காணப்படுகின்றது. | இந்தக் காணியின் உரிமையை எங்களுக்கு சுவீகரித்து தருமாறு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க அது நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு இணக்கப்பாடு வழங்கியிருந்ததுடன் அதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காணி நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதை விட எங்களுடைய அமைச்சின் ஊடாக கொடுப்பனவு பத்திரமன்றின் மூலம் சுவிகரித்துக் கொள்வதற்கு பொருத்தம் என்பதாக அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்த மத்திய நிலையம் அமைந்துள்ள காணி அமைச்சரவை அங்கீகாரத்துடன் விசேட கொடுப்பனவு பத்திரத்தின் ஊடாக கடற் தொழில் அமைச்சின் மூலம் சுவிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 2023.∵. 05.∵. 26 ஆம் திகதியிலான கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | குறை பயன்பாட்டு சொத்துக்களை பயன்பாட்டு நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (இ) | 2011 ஆம் வருடத்தில் ரூபா 12 மில்லியன் செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட ‘‘தரணி’’ படகு தொழில்நுட்பக் கோளாறு காரணமாக எவ்வித பயன்பாட்டிற்கும் உட்படுத்தப்படாமல் 10 வருட காலத்திற்கு மேலிருந்து விளைவற்று காணப்பட்டது. | ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக புதிய கண்டுபிடிப்பு ஒன்றாக பரிசோதித்துப் பார்ப்பதற்காக உருவாக்கப்பட்ட படகு ஒன்றாகும். தற்போது இந்த படகு கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவதற்கு முடியுமான வகையில் தயாரிப்பதற்கு நிறுவனத்தின் பணிப்பாளர் சேவை செயற்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பொருத்தமான ஆராய்ச்சி நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 7,512,800 ஆன பெறுமதியுடைய 9391 சிப்பி படிவங்கள் இருப்பொன்று பல வருட காலமாக பயன்பாட்டிற்குட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்த சிப்பி படிவங்கள் இருப்பொன்று கொரிய முதலீட்டாளர் ஒருவரினால் நாரா நிறுவனத்துடன் மேற்கொண்ட பரிசோதனைக்காக பாவனைக்குட்படுத்தி மீண்டும் எடுத்துச் செல்லப்படாமல் நிறுவனத்துக்கு வழங்கியிருந்த இருப்பொன்றாகும். இது தொடர்பாக கணக்காய்வு ஐய வினா மீது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் எதிர்கால வருடங்களில் இது தொடர்பாக புதிய பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொருத்தமான பரிசோதனை நடவடிக்கை ஒன்றுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| முகவர் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான முகாமைத்துவ திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவி அணியினரின் விபரங்களின் பிரகாரம் உயர் முகாமைத்துவ மட்டத்திலான ஸிரேஷ்ட பதவிகள் 03 கும் மற்றும் மூன்றாம் நிலை விஞ்ஞானி பதவிகள் 50-ம் முகாமைத்துவ மட்டத்திலான மூன்றாம் நிலை பதவிகள் 09 உம் கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்திலான இரண்டாம் நிலை பதவிகள் 12 உம் மற்றும் முகாமத்துவ சேவை ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள் 36 உம் உள்ளடங்களாக இரண்டாம் மட்டத்திலான பதவிகள் 87 கும் மற்றும் ஆரம்ப மட்டத்திலான தொழிலாளர் பதவிகள் 57 ம் வெற்றிடமாக காணப்பட்டது. இதன் காரணமாக ஆராய்ச்சி தொழில்நுட்ப பிரிவின் பதவிகள் பெரும்பாலானவை வெற்றிடமாக காணப்படுவதனால் ஆராய்ச்சி செயல் திட்டங்கள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படுவதற்கு நேரடி தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | நாரா நிறுவனத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2022 மற்றும் 2023 வருடங்களில் வரைவு அமைச்சின் ஊடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை கூறப்பட்டுள்ளது. இருப்பினும் அந்த வருடங்களில் அதற்கான அங்கீகாரத்தை வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஆச்சேப்பு இடம் பெற்றிருக்க வில்லை. | உரிய பிரிவுகள் மற்றும் வினைத்திறனுக்கு தேவையான பதவிய ணியினர் நியமிக்கப்பட வேண்டும். |